* வியோமர்—ஆகாயவாசிகள். † கோ-அரசன்.
‡ கோ-பெருமை. ¶நற்கோல்-செங்கோல் §அமரும்-தங்கும்
|| காபுரி-கற்பகத்தையுடைய தேவலோகம்.

கொட்டு முழக்குங் குடவளையி னோசையும்லா
னெட்டவிண்ணோர் வந்திறைஞ்சு மேர்மருங்கை மாநகரான்
தங்கச் சிகரந் தமனியப்பொன் மாளிகைக
ளெங்குந் திகழு மெழின்மருங்கை மாநகரான்
பொற்புடையார் மிக்க புகழுடையார் பூணுடையார்
கற்புடையார் வைகுங் கனமருங்கை மாநகரான்
எங்கெங்கு மீச னியங்குதல்போற் றன்மமெலா
மெங்கெங்கு மோங்கு மெழின்மருங்கை மாநகரான்.

மாலை.

தேமுல்லை வெண்பற் சிவந்தவித ழாய்ச்சியர்சூழ்
மாமுல்லை மாலைநிகர் மாமுல்லை மாலையினான்
தண்ணெனுங்கார் மைக்கூந்தற் றையலார் செய்யவரிக்
கண்ணெனுங்கார் வண்டுமொய்க்குங் கார்முல்லை மாலையினான்
மாகனக வெற்பிரண்டு வாய்ந்ததென வந்திலகு
வாகவிர்பொன் வாகின்மிசை வாகையணி வாகையினான்
சுகமணக்கு நாற்கவிஞர் சொன்மணக்கச் சூட்டுஞ்
செகமணக்குஞ் சீமணக்குஞ் செந்தமிழ்ப்பா மாலையினான்

பரி.

அடையலர்கள் வெருவிவிழ வடலொழிய வுடலினுயிர்
படபடென வுரமதிலொண் பரதநட மிடுபரியான்
வெந்திறற்பெ ருங்களத்தின் மிஞ்சிடப்ப தம்பெயர்த்து
பந்தெனக்கி ளர்ந்துசுற்று பஞ்சலக்ஷ ணப்பரியான்

கரி.

மகிதலங்கு லுங்கவட்ட மதகயங்க லங்கநெட்டி
இகல்களைந்தி டும்ப்ரசித்த விசைமிகுந்த குஞ்சரத்தான்

கோடி.

துங்கப் பெருவிசும்பிற் றோன்றியிறு மாந்திருக்குஞ்
சிங்கத்தின் மேற்பாயுஞ் சிங்கத்தின் கேதனத்தான்
ஓடுமுகில் சூழ்விசும்பி னோங்கித் தடவுதலால்
ஆடெருது கன்னியுமங் கஞ்சும் புலித்துவசன்
கதிரிரவி தன்னைக் கனியெனப்போய்த் தாவு
மதியுக்ர வீர வனுமக் கொடியுடையான்

முரசு.

தானங்கல் யாணஞ் சயமெனத்தன் முன்றிலிடை
வானவருங்காண வரமுழங்கு மும்முரசான்

ஆனை.

தருமத்தின் செல்வி சதுர்பாத முற்று
மருவச் சிறக்கு மனுமுறையின் செங்கோலான்
கண்டவுடன் மாற்றலர்தங் கண்ணுமன முங்கலங்கி
யண்டிவரற் கஞ்சு மநந்தவெள்ளச் சேனையினான்
மின்னல் மழுங்கவுயர் விண்ணோர் விழியிமைக்க
ஒன்னலர்கண் கூச வொளிர்மந்த்ர வாட்படையான்
மான்மகன்றன் கையின் வயங்குமக ரக்கொடியும்
வான்மகர மும்வெருவு வான்மகர *வேதிகையான்
பங்கயக்கண் மாற்குப் பரியாய்க் கொடியாகுஞ்
செங்கருட னுந்தியங்குஞ் செங்கருட வேதிகையான்
துன்னும் பணியாளர் சூழ்ந்தருகில் வீசிவர
மன்னும் விசித்ரபஞ்ச வன்னப்பா வாடையினான்

* வேதிகை=கேடகம்

ன்னுள் நிலவெறித்துத் தேய்மதிபோற் றேன்றும
லங்நாளுந் தேயா திலங்குமுத்து வெண்குடையான்
லங்காத லால்வெல்லல் வெற்றியன்றென் றெண்ணிக்
லங்கா திருக்கக் கரியினத்தைக் காத்தருள்வோன்
ற்றவர்வேல் தைத்து வடுப்பட்ட மாற்றலரைச்
ற்றுமெண்ணு தெச்சிலெனத் தள்ளும் பெருங்குணத்தான்
திராக நேரு மெளியோர் தமையு
முதியோரை யுந்தான் முனியாத நீதிபரன்
நஞ்சமென்றார்க் கஞ்சலெனச் சாற்றியவர் தம்பகைதீர்த்
தெஞ்சலின்றிக் காக்கு மிரக்கமுள நெஞ்சகத்தான்
மங்காத கீர்த்திபதி மாதர்ம நீதிபதி
சிங்காத ஞதிபதி செந்திருவி லாசபதி
ராஜரா ஜாதிபதி ரத்னமகு டாதிபதி
தேசதே சாதிபதி சில்லவார் வம்சபதி
தண்ணியத யாளபதி சம்ப்ரமத ளாதிபதி
கண்ணியகு ணளபதி கம்பளகு லாதிபதி
வித்வரங்க க்ருஷ்ணமுத்து வீரபூச்செ யாதிபதி
சித்தமகிழ் புத்ரனெனச் செய்தவத்தால் வந்தபதி
கருமலையின் மேவுங் கரிவரதப் பெம்மான்
திருவரம்பெற் றென்றுஞ் செயம்பெற்று வாழ்பெருமான்

மருங்கைமீ ணுக்ஷி வளநாட்டிற் செல்வந்
தருங்கைமீ ணுக்ஷிமலர்த் தாள்பரவுஞ் சம்பன்னன்

மின்னுமணி யங்குறிச்சி மேவுதுவ ரங்குறிச்சி
அன்னே கயற்கண்ணி யம்புயத்தாள் போற்றுமன்பன்

திருக்கோயிற் பட்டியினிற் றேவர்சோ ணைசர்
திருக்கோ கனகமலர்ச் சேவடியைச் சிந்திப்போன்
வானையூர்ந் தேகு மதிரவிசூழ் மால்வரைசேர்
ஊனையூ ரைய னுபயபதம் பூசிப்போன்
ஊற்றுக் குழிப்பதியு மோங்குபொரு வாய்ப்பதியு
மேற்றமக மாயியரை யென்றுந் துதிபுரிவோன்
ஆண்டருளும் பூசைவீட் டம்மையையு மாட்சியுறுந்
தூண்டிக் கறுப்பனையுந் தோத்திரஞ்செ யன்புடையான்

அரண்மனைச் சிறப்பு

முக்கோட்டை யுஞ்சிவனால் முன்னழிந்த தாமழியா
திக்கோட்டை யென்றிங் கிலகுமலைக் கோட்டையினான்
வச்சிரக்கற் பித்திகைமேல் வண்மைத் தளம்பரப்பிப்
பச்சையினாற் சித்ரம் பதித்த வரண்மனையான்
செங்கனகப் போதிகைசேர் செம்பவளத் தூணிறுத்தித்
தங்க மணிக்கதவு சார்ந்த வரண்மனையான்
மாணிக்க * க்ராதி மரகதத்தாற் சாளரங்க
ளாணிப்பொன் னாற்படியு மார்ந்த வரண்மனையான்
கந்தருவ மின்னாருங் கண்டுகளி கூருமெழி
லிந்திரன ரண்மனைபோ லெய்து மரண்மனையான்
பஞ்சரத்திற் குள்ளிருக்கும் பஞ்சவன்னப் பைங்கிளிகள்
கொஞ்சிக் குலாவிமகிழ் கூரு மரண்மனையான்
பற்பலவாஞ் சித்ரப் படமும் பதுமைகளு
மற்புதமி தென்ன வமைத்த வரண்மனையான்

---

* க்ராதி - மதிலினொருறுப்பு

வாத்தியப்பொற் பெட்டி மணிக்கடியா ரங்களுமா
நேத்தியுற வெங்கும் நிலவு மரண்மனையான்
தண்ணுர்ந்த வெள்ளைச் சலவைக்கல் மேஜைநிலைக்
கண்ணு டியுநிரைத்த காம ரரண்மனையான்
தந்தநாற் காலிகளுந் தங்கரத்ந சோபாவும்
விந்தையுற வைகும் விசித்ர வரண்மனையான்
கோலமிகு லஸ்டர் குளோப்புவால் சேட்டுகள்பொற்
சாலர்முத்துப் பந்தர் சமைத்த வரண்மனையான்
பொற்பாருஞ் சங்கிலியைப் பொன்மரக தப்பலகை
யிற்பூட்டு மூச லிலகு மரண்மனையான்
தீண்டாத கற்பின் றிருவனையார் செங்கரத்தாற்
றாண்டா விளக்கிலகுஞ் சோதி யரண்மனையான்
பூங்கா வனத்திற் புனற்றடமுஞ் சூழ்ந்தினிய
பாங்காக வின்பம் பயக்கு மரண்மனையான்
வளையாடக் * கன்ன வளையாட மானுர்
விளையாடப் † பூவார் விளையாடும் வாசலினுன்
வந்தடிக்கத் துரமென்று வாழ்மனைக்கண் மேவிவிருப்
பந்தடிக்கப் பங்கயப்பெண் பந்தடிக்கும் வாசலினுன்
படியளக்கு மோர்நெடுமால் பல்லுயிர்க்கெந் நாளும்
படியளக்கும் பண்பாய்ப் படியளக்கும் வாசலினுன்
பரிவினடுத் தார்க்கமுதம் பாலிக்குந் தெய்வச்
சுரபி யனைய சுரபிகட்டும் வாசலினுன்

---

* கன்னவளை - காதாகியவள்ளைக்கொடி

† பூவார்-இலக்குமி, சரசுவதி

மூந்தநந்த மன்னர் முயன்றுவந்து நற்குதிரைப்
பந்திகட்டி மற்றும் பகுதிகட்டும் வாசலினுன்

துதிபரவு மீசன் றுணையாற் குபேரன்
நிதிபரவு மாபோல் நிதிபரவும் வாசலினுன்

அணிவிளக்குஞ் செய்யா ளதிசயிக்கும் பொற்பின்
மணிவிளக்கு மாதர் மணிவிளக்கும் வாசலினுன்

அற்புதமா மூவரும்விண் ணுர்ந்தபல தேவர்களுங்
கற்பகப்பூ மாரிபொழி கல்யாண வாசலினுன்

வனவாழை தென்னை வளர்கமுகு நாட்டிக்
கனமங்க லந்துலங்குங் கல்யாண வாசலினுன்

தோரணகும் பம்நிறுத்திச் சூழ வலங்கரித்துப்
பூரணகும் பம்நிறுத்தும் பொற்புலவும் வாசலினுன்

சிங்கார மோகனச்செந் தேன்மொழிமின் னுரினிய
சங்கீதம் பாடிநிருத் தம்புரியும் வாசலினுன்

தூநிறப்பொன் மாமணிப்பொற்*சூழிகட்டி யிந்த்ரன்வெள்ளை
யானைகட்டும் வாசலென யானைகட்டும் வாசலினுன்

தகையிலங்கு தங்கத் தகடிலங்கச் சாரெண்
டிகையிலங்கச் செய்தண் டிகையிலங்கு வாசலினுன்

மாசீர் பெறுவேத மாதவரும் பாவலரும்
ஆசீர் வதித்துறையு மாசார வாசலினுன்

வாய்ந்த மனுமுறைநல் வைணவசி வாகமங்கள்
ஆய்ந்தபெரி யோருறையு மாசார வாசலினுன்

வெற்றிபெறு மிக்க விருதுசொல்லிக் கட்டியர்கள்
அற்பொடுகை கட்டிநிற்கு மாசார வாசலினுன்

---

* சூழி - யானைமுகபடாம்.

தலைவன் சிறப்பு:

அம்போ ருகமலர்ந்த தாமென் றியாருமகிழ்
கம்பீர மார்ந்த கருணா ரசநயநன்
கல்விரச மெல்லாங் கனிந்துருகுஞ் சங்கீதச்
செல்வரச மேற்குஞ் செழும்பொற் றிருச்செவியான்
கோடசையா தோரெட்டுக் குஞ்சரமுந் தாங்குமிந்த
நாடசையத் தானசைக்கு நன்னயஞ்சேர் நாவுடையான்
வந்தாரைக் கண்டலர்ந்து வாய்மொழிச்செந் தேன்பிலிற்றுஞ்
செந்தா மரைபோற் றிகழுந் திருமுகத்தான்
எட்டு வரைகளையு மெட்டுவரை யாமதித்துத்
தொட்டுத் தகர்க்கவல்ல சுந்தரவ ரைப்புயத்தான்
வெங்கோ லரசருக்கு மெய்க்கோல் நெறிபயிற்றுஞ்
செங்கோல் பிடித்திலகுஞ் செந்தா மரைக்கரத்தான்
*கரும்பொன் னெனினுந்தங் கையிலிலார்க் கன்பி
னிரும்பொன் வழங்கு மினிய கொடைக்கரத்தான்
போவென்று லுத்தர்சொலிப் போகவிட்ட யாவரையும்
வாவென் றழைக்கும் வனச மலர்க்கரத்தான
வானம் புவியுள்ள மட்டுமழி யாதுபெருந்
தானம் வளர்க்குந் தருவனைய செங்கரத்தான்
யார்மீ தெமைப்புரக்கும் பக்ஷம்விடே லென்றுமின்னார்
மார்போ டணைக்கு மலரனைய செங்கரத்தான்
சாய்ந்து வணங்குந் தரியலர்தஞ் சென்னியெலாந்
தோய்ந்து சிவந்தகழல் சூழுந் துணைப்பதத்தான்

---

* கரும்பொன் - இரும்பு.

மார்க்கண்டன் போலிந்த மண்டலத்தி லெந்நாளுந்
தீர்க்காயுள் பெற்றோங்குந் திவ்ய சரீரத்தான்
மங்கையர்தஞ் சிந்தை மயங்கி மடலெழுதுந்
தங்கமய ரூப சவுந்தரிய வொய்யாரன்
ஜெகராஜர் மெச்சுந் திருவும் புகழு
மிகமேவுங் க்ருஷ்ண விஜயஜெய பூபாலன்
சமுகமதில் வித்வஜனர் சந்ததமும் வாழ்ததும்
விமிதகுண க்ருஷ்ண விஜயஜெய பூபாலன்
தொன்மதுரை மீனாக்ஷி சுந்தரனைப் போற்றியருண்
மினமருவு க்ருஷ்ண விஜயஜெய பூபாலன்
எண்ணிரண்டு *பேறு மிருநான்கு போகமுந்தான்
நண்ணியிவன் வாழுமிந்த நன்னாளி லேயொருநாள்
திவ்வியநீ ராடித் திருநீற்றுக் காப்பணிந்து
செவ்வியம னத்துளிஷ்ட தெய்வங்க ளைத்துதித்து
பன்னுந் தமிழ்வேத பாராய ணம்வினவி
மன்னுதன்ம தானம் மகிழ்வாகத் தான்வழங்கி
முத்துகுத்தாற் போலனமு முக்கியந றும்பருப்பும்
புத்துருக்கு நெய்யும் பொரியல் வரள் மோர்க்குழம்பும்
துவட்டல் மசியல் சுவைமிகுத்த கூட்டும்
உவட்டாத் துவைய லுவப்பா மிரசமுடன்

---

* பேறுபதினாறுவன - அழகு, இளமை, பொன், நெல், நன் மக்கள், நல்வாழ், நுகர்ச்சி, நோயின்மை, துணிவு, வன்மை, கல்வி அறிவு,பெருமை,புகழ் வெற்றி. வாழ்வு.

த்துவிதம் பச்சடிகள் பன்னுந் தயி *ரடைகாய்
த்தமகி ழப்பளமுந் திவ்யவடை பாயசமும்
ர்க்கரையி லட்டுகங்கச் சாயவகை முக்கனியின்
ர்க்கமுடன் தன்பந்து வர்க்கமுடன் பந்தியினில்
ட்டமனை யிட்டுவெள்ளி வாழையிலை யிட்டுவெகு
ட்டதிட்ட மாகபரி சாரகர்வி ருப்பினிட
ாதுரிய போஜனம ணங்கமக மென்றுபதின்
ாத மணக்கமலர்க் கைமணக்க வாய்மணக்கப்
ுத்தமுத முண்பவர்போற் பூரித் தறுசுவையூண்
பத்திபுரிந் துண்டு பனிநீராற் கையலம்பி
துங்கமணப் பாகுஞ் சுருளுமடைப் பக்காரர்
தங்கரத்தா லேந்தநறுந் தாம்பூ லமுமருந்தி
அத்தர் புனுகோ டரைத்தகதம் பந்திமிர்ந்து
சுத்தப்பொன் னுடை சொகுசாய் வரிந்துடுத்தி
சித்ரா பரணந் திருமேனி யிற்புனைந்து
முத்துத் துராபின் முடியை முடிக்கணிந்து
மங்கலகீ தம்முழங்க மாமறையோ ராசிசொலச்
சிங்கவனை மீதிலேயன் சீராமன் போலிருந்தான்
அத்தருணங் கோமா னமைச்சருடன் சம்பாஷித்
தித்தருணம் வேட்டைக் கியாம்போக வேண்டியதால்
ஏவலரை நோக்கி யிசைவேடர் வில்லியர்க்குங்
காவலர்க்கும் வீரதள கர்த்தருக்குஞ் சொன்மினென்றே
எங்கோ னரண்மனைக்கெ ழுந்தேவ லாளர்தம்மால்
பங்காளப் பொறசரிகைப் பட்டுநிஜார் தொட்டுறுக்கி

---

* அடைகாய் - ஊறுகாய்.

முன்னங்கியிட்டு முதுகிலம்புத் தூணியிட்டுத்
துன்னுமிடைக் கச்சைகட்டிச் சுங்குவிட்டுத் தொங்கவிட்டு
சேனைக் கதவியினச் சென்னிக் குலைசாய்க்கு
மாநற் படைவாள் மருங்கில் வரிந்துகட்டி
விற்பிடித்து டால்பிடித்து வேல்பிடித்து மென்சரிகைப்
பொற்புலவு தோற்கவசம் பூத்தமலர்த் தாட்கணிந்து
பூசைவீட் டம்மைபதம் போற்றிக் கரிவரத
ராஜப் பிரானையெதிர் நாடிமிகத் தெண்டனிட்டு
காடதனிற் றூண்டிக் கறுப்பையா நீதுணையாய்க்
கூட வருகவெனக் கும்பிட்டுத் தானழைத்து
யானைக் கணங்களஞ்ச ராசவிளஞ் சிங்கமொன்று
தானே வருவதுபோற் றன்புரிசை வாசல்வந்தான்

வேட்டைச்சிறப்பு.

வாயுவே கம்பின் மனவேகந் தான்சிறிதிங்
கேயுமெனச் சாற்று மெழிற்பரியின் மீதமர்ந்து
தவளக் குடைநிழற்றச் சாமரையி ரட்டக்
கவன விருதுசொல்லிக் கட்டியர்க ளார்ப்பரிக்க
ஆலவட்ட மேலுதித்த வாதித்த னைமறைக்கத்
தாலவட்ட மேன்மண் டலத்தைத் தடவிவர
சங்கீத வாத்யஞ் சமுத்திரம்போற் றூமுழங்க
மங்கா விருதினமும் வான்முகட ளாவிவர
மாற்றலருங் கண்டலற வல்லயம்வேல் வாள்பிடித்துச்
சீற்றமிகு வெம்பரிமேற் சிற்றரசர் சூழ்ந்துவரப்

V. Vedanayagam Pillay, M.A., B.L.

பந்தித் தளாதிபரும் பண்பிற்ப்ர தானியருஞ்
சந்தித் தருகிலுறுஞ் சற்றுணமெய்க் காவலரும்
ஊர்காக்கு முத்திலிய ஆழியருஞ் சேர்வையரும்
சேவர்பேர்க்கும் வில்லியரும் வேடர்களு முன்னடக்க
கருக்கான வாயுதமுங் கையுமா யெல்லாஞ்
சுருக்கா யணிவகுத்துத் தோள்தட்டி முன்னடக்க
எட்டானை வந்தாலு மெற்றியிரு கொம்பொடித்து
வெட்டாமற் பந்துபோல் விட்டெறிவோ மென்பாரும்
விண்சிங்கம் வந்தாலும் வேகமுடன் மேலேறி
மண்சிந்தச் சாரிசுற்றி வந்திடுவோ மென்பாரும்
அன்றுமுனி தந்தபன்றி யாவிபெற்று வந்திடினுங்
கொன்றுமென்று தின்றுமகிழ் கூர்ந்திடுவோ மென்பாரும்
மூச்சு விடாமல் முனிந்தே வரும்புலியை
வீச்சுக்கோ ராயிரமாய் வெட்டிடுவோ மென்பாரும்
தாப்பிற்க ளிற்றைவெட்டித் தந்தத்தாற் கூத்தியர்க்குச்
சீப்புஞ் சிமிழுஞ் சிணுக்கரியுஞ் செய்வமென்றும்
கஸ்தூரி பூசிக் கலந்தணையக் காதலிக்குக்
கஸ்தூரி மானைவெட்டிக் கஸ்தூரி கொள்வமென்றும்
சிங்கத்தைக் கொன்றுதங்கச் சிங்கமுகத் தோடாவைப்
பங்கமின்றி நாமும் பரிசுபெற வேண்டுமென்றும்
கொண்ட மனையாட்குக் கொண்டையிட்டுப் பார்ப்பதற்கு
மிண்டக் கருங்கவரி மென்வால் துணிப்பமென்றும்
செய்யமா னெய்துரினயச் சீமான் செயும்பூசைக்
கையமின்றி வீற்றிருக்க வாதனமா யீவமென்றும்

ஈரமிலாவவ்வவர்க ளெண்ணிச் சவுரியமாய்
வாரித் திரைவிரவும் வண்மைபோல் முன்னடக்க
சொலற்கருந்தன் மேளத் தொனிபோல் விண்மீது
மொலிப்பதுவு மென்னோவென் றெட்டகம ணுந்துவரக்
கத்திகுண்டு துப்பாக்கி கட்டாரி யீட்டிகளுஞ்
சத்திவேல் சூலங்கை டால்பாங்கு தோமரமும்
வல்ல விருப்பு வலையும் வளைதடியும்
வில்லுங் கணையொடுண்டை வில்லுங் கவணுடனே
பாயும் புலிமீதும் பாய்ந்துகௌவும் வல்வேட்டை
நாயும் பிடித்து நடந்துவரும் வீரியராய்
சூடுறையுந் தோலுடையுந் தோன்முடியுந் தொங்குகின்ற
தாடிகளு மேனிமிர்ந்த சாண்முறுக்கு மீசையராய்க்
கானகத்தில் வேடுவர்கள் கால்வீசி முன்னடக்கச்
சேனைப் பெருமுழக்காற் சேணுங் கிடுகிடென
வீரப் படைநடையின் வேகச்செந் தூளியினால்
வாரி குழப்புறவெள் வானஞ் சிவப்பேற
டம்மார வோசை தனைவான் சுரபியுங்கேட்
டம்மா வெனவே யலறிநெடு மூச்செறியக்
கூனற் பிறையனைய கொம்பொலிக்குப் பொன்னூட்டுத்
தானக் கயமுந் தயங்கி மனந்தேற
கீர்த்திபெறு மெங்கோன் கிருஷ்ணவிஜ யேந்த்ரதுரை
யார்த்தபெருங் கான்வேட்டை யாடவரும் வழியில்
வலிய னிடமாக வந்தோர் மரத்தில்
நலமாகப் பேடுடனே நண்ணி யுவந்தணைய

ங்கலமி லங்குமெழின் மாமருங்கை மாராஜ
ங்கமது கண்டுநகை செய்தே மனமகிழ
த்தருண நற்சகுன மென்றுமதி மந்திரிமார்
த்த மறியச் செகபதிக்கு முன்புரைத்தார்
லியன் வலமிருந்து வண்மையிட மாக
லியதால் வேட்டை நிறைவேட்டை யாகுமென்றார்
ாவில்வலி யன்பெடையைக் காதலித்துக் கூடியதால்
ழுவலுற மன்னற் கருங்கனியொன் றெய்துமென்றார்
ன்றுரைக்க நன்றென் றிசைந்துவிஜ யேந்ரதுரை
மன்றலின் *வாற் பொற்றை மலைச்சாரல் வந்தணுகி
சொற்பயிலும் வேடுவராற் சுற்றிவலை கட்டுவித்து
மற்பயிலுங் கட்டாப்பில் வாள்வீ ரரைநிறுத்தி
ளங்கோன் பரிவிட் டிறங்கிப் பெருமுரசஞ்
சங்காழி போன்முழங்கத் தாட்டிகளில் வேடரெலாங்
கூட்டத் துணைவர் குடும்பத்தைக் கோள்குற்றங்
காட்டிக் கலைப்பவர்போற் காட்டைக் கலைத்துவிட்டார்
காவின்மிரு கங்கள் கலைந்தொன்றோ டொன்றுறைந்து
கூவி மருண்டுட் குழைந்து திரண்டோட
ளட்டுமொளிக் கட்டி யிருந்ததைக்கண் டெங்கோமான்
சுட்ட குழல் வேட்டாற் சிலமிருகஞ் சோர்ந்துவிழக்
கட்டாப்பில் வந்தவுடற் கட்டாரும் பன்றிகளைக்
கட்டாரி யால்தேகக் கட்டார்ந்த வீரர்குத்த

---

* வாற்பொற்றை—மருங்கை நாட்டிலுள்ள சோர்மலை.

துப்பாக்கி யால்மடிந்த சூகரங்க ளைக்குருதி
துப்பாகக் வேடருக்குந் துப்பாக்கி டைத்தனவே
வெடிமிகுந்த புகையெழுந்து விழிசிவந்த மதகயங்கள்
கிடுகிடென்று மறுகியங்கு கிறுகிறென்று ளுயிரழுங்க
எட்டுத் திசைச்களிறு மெட்டாவ ராகமும்விண்
வட்டத்தின் சிங்கமுமா யங்கி மனந்தெளிய
வாட்டமுற்று மேல்பதைக்க வால்துடிக்க வாய்பிளக்க
ஈட்டிபற்றி வேடர்குத்தி யீர்த்தபுலி யார்த்துவிழ
இடர்வலையில் விழுமிருக வினமவையின் முடுவல்விழப்
படர்தலையின் முதுகிலடி படபடப டெனவுதற
வில்லா லடிப்பவரும் வேக மிகுத்தகவண்
கல்லா லடிப்பவருங் கம்பா லடிப்பவரும்
சூலம் பிடித்துச் சுடர்வே லுடன்பிண்டி
பாலம் பிடித்தெறியும் பண்பினரு மார்ப்பரிக்க
வண்ணக் குயிலு மயிலும் விஜயேந்த்ர
புண்ணியனைக் கண்ட புலவர்மிடி போற்பறக்க
தந்தமக்கு நல்விருந்து தந்தவிஜ யேந்திரற்குப்
பந்த ரிடல்போற் பறைவையினம் வட்டமிடச்
சத்தியத்தைத் தாங்கடந்த சற்டனையார் தம்மனம்போல்
வைத்தவலை மீறி வனப்பகடொன் றேகியதே
ஐயனிந்த வண்ண மடல்வேட்டை யாடியபின்
செய்ய வடிவுளமான் சிக்கத்துட் சிக்காமல்
சுறறி மறிக்கவருஞ் சூரருக்கு ஞாளிகட்கு
மெற்றுங் குழற்கு மிருங்கணைக்கு மெட்டாமல்

ாடும் புலவர்முகம் பார்த்துப் பயந்தொளிக்க
வோடு முலுத்தரைப்போ லோடு மதிவிரைவை
தும னெதிர்நோக்கிப் புன்சிரிப்புக் கொண்டுநடந்
தேமவில் லுங்கணையு மேந்திவிளை யாட்டாக
மானோடத் தானோடி வந்ததுஷ்டி யந்தனென
மானோடத் தானோடி வன்கணைக்குப் பூசையிட்டான்
அம்மானம் மன்னனுக்கோ* ரம்மானைக் காட்டியபோல்
இம்மானிம் மன்னனுக்கோ ரோர்மானைக் காட்டியதே
கன்னற் சிலைபிடித்துக் காமன்வரல் போன்மகிபன்
பொன்னின் னவகேணிப் பூங்காவைக் கண்டடைந்து
தெண்ணறுநீ ராடித்தன் றேகவிடாய் தீர்ந்தடர்ந்த
தண்ணியம லர்ப்பாரி சாதநிழல் வீற்றிருந்தான்
முந்தித்தன் சேயை முயன்றடிமை கொண்டவன்முன்
வந்தனனோ வென்றுதென்றல் வந்துடலின் வேர்வகற்ற
மணமகனுக் கான்றோர் மலர்தூவ மாபோல்
மணமிகுபூங் கான மலர்மாரி தான்பொழிய
சார்ந்த மணமகற்குச் சங்கீதம் பாடுதல்போ
லார்ந்த குயில்க ளரிய குரலிசைக்க
மேவுமண வாளன்முன் மெல்லியர்க டிப்பதுபோற்
றுவி மயில்கள் சதிராய் நடம்புரிய
மின்னணிசேர் க்ருஷ்ண விஜயபூ பாலனந்த
வன்னதத்தைக் கண்டுமன வுல்லாச மாயிருக்கத்

---

* அம்மான் — அழகிய பெண் (சகுந்தலை.)

தலைவிசிறப்பு

தண்மலர்ப்பூங் கோதை சகலகலா வல்லியெனும்
பெண்மணிதன் கண்மணிபோற் பெற்றெடுத்த கட்டழகி

வஞ்சியர்த நாற்குலத்தின் மாண்சேர் பதுமினியாம்
ரஞ்சிதமி குத்தஅப ரஞ்சியெனுங் பெண்பெருமாள்

மதனபரி பாகம் மதனநிரு வாகம்
மதனசுக த்யாகம் மதனசுக வைபோகம்

மதனரதி ரூபம் மதனகலா தீபம்
மதனசுக லாபம் மதனசுக நிக்ஷேபம்

காமப் பிரசாதங் காமப் பிரபோதம்
காம நவநீதம் காமகலை ப்ரக்யாதம்

காமன் மனவாசம் காமன் விசுவாசம்
காமன் மகிழ்நேசம் காமசுக வுல்லாசம்

முனிவர்க்கோர் பாத்ரம் முனிவர்க்கிரு நேத்ரம்
முனிவர்செயுந் தோத்ர முனிவருறை யும்க்ஷேத்ரம்

இன்பச் சுகவாரி இன்ப ரசமாரி
இன்ப வுபகாரி இன்பமய கம்பீரி

அத்திரவேட் செங்கோ லரசுதழைத் தோங்கவயன்
கைத்திறத்தைக் காட்டிவிட்ட சாட்சிமிகும் பெண்வடிவம்

உலையி னுருக்கா துளியாற்செ துக்கா
திலகுமலர் மின்போ லிவனுதித்த பொற்பாவை

ஆர்ந்த படத்தி லசைவற் றிருக்காமற்
சார்ந்துநட மாடுஞ் சவுந்தரிய ரூபசித்ரம்

துண்ணென்று மேசத்திற் றோன்றி மறையாமல்
மண்ணுலகிற் சஞ்சரிக்க வந்தொளிரு மின்கொழுந்து
பற்றிப் பலரும் பலகையிட நையாமற்
சுற்றி மணக்குஞ் சுகந்த மருக்கொழுந்து
வண்டுமுக ராமல் மகரந்தஞ் சிந்தாமல்
மண்டுதென்ற லால்வெயிலால் வாடா மலர்மாலை
கல்லி லுரைக்காமற் காய்ச்சி யுருக்காமல்
மல்லல் வடிவழகு மாற்றுயர்ந்தி லங்குதங்கம்
அவக்கடலிற் றோன்றிமணி யாகாமற் பெற்றோர்
தவக்கடலிற் றோன்றிநிலந் தாங்குங் கொடிப்பவளம்
நங்கையர்பற் கஞ்சியவர் நாசியிற்றாக் கேறாம
லங்கசன்மார் பிற்கார மாயிசைந்த வாணிமுத்து
கண்டாற் றவத்தோர் கடின மனப்படிகந்
துண்டாக்க வல்லதிவ்ய சந்தரஞ்சேர் மாவயிரம்
பொன்னணியிற் செப்பிற் புதைந்துக் கிடவாம
லுன்னதநீண் மாடத் துலாவிவருஞ் சீவரத்நம்
உம்பருக்கு மெய்தா துருக்கண்டார்க் கப்பொழுதே
யைம்பொறிக்கு மின்பவிக்கு மற்புதமாந் தெள்ளமுது
செங்கனலாற் றீந்து சிவந்துகுழம் பாமல்மெய்
பெங்குந்தித் திக்கு மினியநறுந் தேம்பாகு
ஆலையுற்று நைந்தே யதன்சுவைகல் காமலெழிற்
கோலமதைக் காணிலின்பங் கொட்டுமெழிற் செங்கரும்பு
பூமரத்திற் றாவாமற் புன்கூட்டிற் கூவாமல்
மாமலைக்குட் கீதம் வழுத்துங் குயிற்பேடு

கூறியதைக் கூறியொரு கூட்டி லடங்காமற்
றேறிமத னுகமங்கள் செப்புங் கிளிப்பேடு
கஞ்சமலர் மீதிருந்து காயம்வெளி றுமலன்பர்
நெஞ்சமன் மீதில் நிலவு மணப்பெடு
செப்புமலை மீதுஞ் செறிவனத்துந் தாவாமல்
சப்ரமஞ்ச மீதுலவுஞ் சம்ப்ரமவி நோதமயில்
திண்வலையிற் சிக்காமற் சித்தசனை யுந்தனது
கண்வலையிற் சிக்கவைக்குங் கட்டழகு றும்பெண்மான்
லண்டுமொய்த்துக் கோட்டில் மலையி லுறையாமற்
கண்டுவக்க விம்பங் கதிக்குஞ் சுவைரசத்தேன்
மாமலையாற் சிந்தாமல் மாசுணத்தைத் தாங்காமற்
காம வமுதுவுங் காம ரமுதகடல்
கன்னியிவள் தன்னரிய கண்ணுனை பாங்கியைப்பார்த்
தென்னிடது கண்ணோ டிடத்தோள் துடிக்குதென் றாள்
தேனூறி மொழிப்பாங்கி தேவியே திவ்யகுண
மானே யுனக்கினிய மங்களமின் றெய்துமென் றாள்
சேடியுரை கேட்டதற்பின் றேன்மலர்ப்பூங் காவனத்தில்
நாடிகறும் பூவெடுக்க நாயகியாள் சிந்தைகொண்டாள்.

தலைவி பூக்கொய்தல்.

கந்தப் பொடிகலந்த கஸ்தூரி மஞ்சள் திமிர்ந்
தந்தரங்க மாய்ப்பனிநீ ராடியம்பொற் பட்டுடுத்துச்
சம்பங்கி வெண்ணெய் தடவிக் குழல்சிவிப்
பம்புசடை பின்னிப் பரிமளப்பூந் தார்புனைந்து

கண்மலர்க்கு மைதீட்டிக் கான்மலர்க்குப் பஞ்சூட்டி
வண்ணமணி மார்பில் வளர்தொய்யி லும்வரைந்து
துங்கக் கலைமதிக்குட் டோன்றுங் களங்கமெனத்
திங்கண் முகத்திற்கஸ் தூரித் திலதமிட்டுச்
சந்திரபிறை சூர்யபிறை சார்ந்தசடைப் பிள்ளையுடன்
சுந்தரப்பொற் சம்புல்மணிச் சுட்டியும்பொற் பிற்புனைந்து
கம்மல் சிமிக்கைரத்நக் கன்னப்பூ கொப்புமுதற்
செம்மையுறும் வள்ளைச் செவிகட் கினிதணிந்து
பல்லி னழகையெட்டிப் பார்ப்பதுபோல் நாசியினிற்
புல்லுந் தாளப் புலாக்குமூக் குத்தியிட்டார்
சங்கக் கழுத்திற் றகுந்தரத்ந வட்டிகையுந்
தங்கச் சவடிமணிச் சந்தாரா மும்புனைந்து
பசியமணி யாரதன பாரம்பொ ரும
லொசியு மெனமருங்கி லொட்டியா ணம்புனைந்து
சித்ரமணி மேகலைப்பூண் திவ்யகலை மீதணிந்து
ரத்நகட கங்கொலுசு ரத்நவளை யுந்தரித்து
விஞ்சுங் கொடிப்பவள மெல்விரலுக் குன்னதவி
ரஞ்சிதவி சித்ர ரவைமோதி ரங்களிட்டார்
நாடகங்கொண் டாடவரு நத்திவருந் தண்டையுநற்
பாடகமு நூபுரமும் பங்கயச்செந் தாட்கணிந்தே
யழகுக் கழகா யலங்காரஞ் செய்து
கழறுந் திருஷ்டி கழித்தார்கள் தோழியர்கள்
அஞ்சொலிள வஞ்சியப ரஞ்சியெனும் பெண்பெருமாள்
மஞ்சுவரக் கண்ட மயில்போ லொயிலாக

அன்ன நடைநடந்தங் கம்புயச்செங் கைவீசி
யுன்னுபல பூப்பறிக்க வுல்லாச மாய்நடந்தாள்

அம்போரு காக்கி யமிர்தாக்கி மீனாக்கி
கம்பீரமாட்சிக் கமலாக்கி காமாக்கி

வேகவதி மோகவதி வேதவதி சீதவதி
போகவதி புண்யவதி போக்கியசௌ பாக்யவதி.

சித்ரவதி ரூபவதி தேரூஞ் சுகுணவதி
எத்தும் விநோதவதி யென்னுமுயிர்ப் பாங்கியரும்

நயவசன மின்னும் நவகேணிக் காவில்
மயிலினங்கள் சூழவரு மாமயில்போல் வந்தடைந்தே

தேனிருக்கும் வட்டில் திருடனந்த கள்ளியெனத்
தேனினங்கள் சூழநறுந் தேன்மொழியாள் பூவெடுத்தாள்

தோடளவுங் கண்ணாள் சுரும்போச்சிப் பூவெடுக்கச்
சேடியர்க ளெல்லாந் திரிந்தோடிப் பூவெடுத்தார்

வேலையொத்த கண்மடவார் வேளை வெகுண்டுகணைச்
சாலையினைக் கொள்ளையிடுந் தன்மைபோற் பூவெடுத்தார்

சுற்றி யருகிருந்த தோழியரெல் லாம்வனத்தைச்
சுற்றி மலர்பறிக்கத் தூரத்தே போய்மறைந்தார்

எல்லாரு நீங்க வினம்பிரிந்த மான்போலச்
சல்லாப மென்மொழியாள் தன்னைத் தனியாகி

மல்லிகை முல்லை மணஞ்சே ரிருவாட்சி
துல்லிபசம் பங்கி ககந்தவெட்சிப் பூவெடுத்து

மன்மத பாணம் மலைந்த சிதமலரி
ன்மணஞ்சேர் பிச்சிமுத னல்லநல்ல பூவெடுத்து
பான விரண்டிருக்கப் பங்கயக்கண் மூன்றிருக்கத்
தேனுலவுஞ் சண்பகமுஞ் செம்முருக்கும் தாமிருக்க
ழல்லை யிருக்க முகிழ்கொங்கி ரண்டிருக்க
ல்லசெங் காந்த ணறும்பூவி ரண்டிருக்க
ிருலகின் மிக்க நிதிவைத் திரப்பவர்போல்
யாளகைய கண்ணாள் மரந்தோறுஞ் சென்றுசென்று
ண்பகமே குங்குமமே சார்ந்தபனி நீர்மரமே
ண்பகமே கொண்டேநீர் நல்லமலர் தாரீரோ
வந்தாரை யாதரிக்கும் மாதவியே பாதிரியே!
மந்தாரை யேகடம்பே வண்ணமலர் தாரீரோ
ஆத்தி மரமே யசோகமே புன்னையெனு
நேத்திமர மேதயலாய் நீங்கள்மலர் தாரீரோ
கோங்குத் தருவேபூங் கொன்றைத் தருவேயிங்
கேங்கு மெனக்கே யினியமலர் தாரீரோ
சந்தனமா மென்றனத்தார் தாம்பிரிந்தார் கோகிலங்காள்
வந்தனங்கள் செய்தேன் மலர்பறித்துத் தாரீரோ
தண்டையிட்ட காலார் தனிவிடுத்தா ருங்களைநான்
தெண்டனிட்டேன் பைங்கிளிகாள் சீதமலர் தாரீரோ
ன்று மொழிக்கங் கொங்கிளியும் பூவையுமவ்
வன்ன நடமயிலே யக்கா வெனவழைக்க
தோழியரைக் காணாது தோகையொரு பூமரத்து
ழலின்கீழ்ப் பூங்கொடிபோல் நின்றே கனித்திருந்தாள்

* மன்மதபாணம் - ஓர்வித மல்லிகை.

தன்னீழ லின்றுனையுந் தானில்லா வேனைமுன்னும்
பின்னும் பறவையினம் பேசுவதை யென்னசொல்வேன்

புட்குலம் தலைவனைப் புகழ்ந்து பேசுதல்.

நன்மருங்கை மாநாட்டில் நாய்பிறந்து வாழ்வதுநாம்
முன்செய்தவ மென்ன மொழியுஞ் சிலகிளிகள்

சத்யநெறி மாறாத தன்மனும் நம்மரசை
யெத்தலமும் போற்றுகின்ற தென்னுஞ் சிலகிளிகள்

கன்னனெனச் சொல்வார்கள் கன்னனுக்குப் பின்னுலகி
லின்னவனே வள்ளலென்றி சைக்குஞ் சிலகிளிகள்

போசனிகர் நம்பெருமான் பூமான்கோமான் சீமான்
பேசுபுகழ்க் கல்விமான் பெம்மா னெனுமான்கள்

சற்றுமுன்னே தான்வேட்டுச் சத்தமிகக் கேட்டதனால்
வெற்றியுட னங்கே விறல்விஜய பூச்செயவேள்

கான்வேட்ட மாடினனேற் காவிற்களைதீரத்
தான்வருவா னிங்கென்னச் சாற்றுஞ் சிலவனங்கள்

வந்தா லவன்வதன மாமதியின் காந்திகண்டு
சந்தோஷங் கொள்வமெனச் சாற்றுஞ் சகோரங்கள்

வேந்தன் மடிமீது மென்மார்பு தோண்மீது
மார்ந்துவிளை யாடவெனக் காசையெனு மோர்பூவை

காட்சிக் கினியான் கருத்துக் கினியானெம்
மாட்சிக் கினியானை வாழ்த்துவமெ னுங்கிளிகள்

நல்லவனு மிந்த நளனனையான் பொற்கரத்தாற்
புல்லுவனே லின்பமெனப் போற்றும் மடவனங்கள்

ாற்றற் கரியசிபிச் சக்ரவர்த்தி யேயிவனென்
றற்றி யருகணைவோ மென்னும் புறவினங்கள்
ங்கீதம் பாடுவான் சந்தோஷ மாகவைய
ரிங்கேநாங் கேட்டுவப்போ மென்னுங் குயிலினங்கள்
ூடவரும் பெண்மை யவாவும் வடிவழகன்
ாடிவரின் மிக்க நலமென்னும் புட்குலங்கள்
இன்னவண்ண மொவ்வொன் றிசைத்த மொழிகளெல்லாம்
பொன்னனையாள் காதிற் புகவு மதிசயித்தே
இன்னவனைச் சேர்வதன்றோ வின்பத்தி னின்பமென
மன்னவனை யெண்ணி மனப்பிரமை கொண்டு நின்று
விற்பனத்தாற் றேர்ந்து விழைந்துநின்ற தன்னெஞ்சைக்
நற்புநெறி மீறிக் கடவா திருத்திநின்றாள்
பம்புமலர்க் காவினின்ற பைந்தொடியைப் பார்த்திவள்தான்
ரம்பையோ காம ரதியோ வெனுங்கிளிகள்
பாரா யிருப்பினுநம் மண்ணல்வந் தாலொருகை
பாராதி ரானென்று பன்னும் பசுங்கிளிகள்
மன்மனம்போல் மின்மனமும் வாய்த்தாலன் றோவுலகி
லொன்றுபட்ட வின்பமென வோதும் மடவனங்கள்
சந்த்ரா ननவிஜய சாமிக்கிசையாவோ
விந்த்ரா ணியுமிசைவா ளென்னுங் குயிலினங்கள்
தங்கிச் சுகிக்கத் தனியிடம்பார்த் தஞ்சாம
லிங்குவந்தாள் வேறெதற்கென் றேசுங் கிளியினங்கள்
இந்தமொழி கேட்ட விளம்பேதை யீதென்ன
விந்தையெனச் சிந்தித்து வெட்கி மெலிந்தனளாய்

நாளுநல்ல நாளின்று நாம்வரும்போ தேயிடது
தோளுமிடக் கண்ணுந் துடித்தவதற் கேற்றாற்போல்
பல்லியும்ப லுக்குதிந்தப் பட்சிகளும் வேறொருவர்
சொல்லிவைத்தாற்போலவொன்றாய்ச்சொல் லுமிந்தச்சொல்
வாழ்வுற் றிருக்க வருமோ நமது பண்டை [லைப்போல்
பூழ்வலியு மின்வா றுதவுமோ நம்மனமும்
மன்னவன்பாற் சற்றே மயங்கியதெ னத்தியங்கிப்
பின்னர்த் தெளிந்து பிசகான வெண்ணமுற்றோ
மென்னத் துணிவியரை யெண்ணிநிற்கு மவ்வேளை
யின்னுபுகழ் க்ருஷ்ண விஜயஜய மார்த்தாண்டன்
ஆற்றலுறுந் தன்பரிவா ரங்களெலா மாங்கிருக்கச்
சாற்றரும்வே ளைந்துகணைச் சாலைவளங் காண்பதுபோற்
சோலைவளங் கண்டினிதாய்ச் சுற்றிவரும் போதுமின்னைக்
காலைவளச் சூரியன்போற் கண்டுகளி கூர்ந்துரைப்பான்

தலைவன் தலைவியைக்கண்டு வியத்தல்.

பாரணங்கோ தெய்வப் பதியணங்கோ நாகநக
ராரணங்கோ நீரணங்கோ யாரோ வறிகிலனே

வவுந்த கண்க ளிமைத்தலாற் சேவடியும்
பூவிற் பொருந்துதலாற் பூவுலகப் பெண்ணரசே

யாமென் றறிந்தவ் வணங்கையர் சென்னவறி
வோமென் றருகி லுறைந்தினிது கூறலுற்றான்

பெண்மணியீர் நீர்தாம்யார் பேசாதிருப்பதென்ன
உண்ணையர்க் நாம்முன்னிய ஏதென்ன பேரென்ன

அனமாய் மதன்மாய்ந்த தற்கார்ற்ரு விண்டு
இவனை மயக்கவந்த திவ்யாங்கி நீர்தாமோ
பட்ட மதனரசு பட்டழியா மற்செழிக்கத்
தொட்டெழுப்பிக் கொண்ட சுகுமாரி நீர்தாமோ
நரவுருவெண் ணுமல் நளனுருவு கொண்ட
சுரருந் தியங்கவரு சுந்தரியு நீர்தாமோ
அந்தரரும் போற்றி யடிபணிவ ரிந்த்ரனையவ்
விந்திரனும் போற்று மிரஞ்சகியு நீர்தாமோ
தரணியையெல் லாந்தன் றனிக்குடையா லாண்ட
புருரவனை யேய்த்துவிட்ட போகவதி நீர்தாமோ
பவத்தைக் கெடுத்துட் பகைகெடுத்த மெய்யன்
றவத்தைக் கெடுத்த சரசவதி நீர்தாமோ
ஆகம் வெளுத்தரற்றி யாழ்கடல்வீழ்ந் தந்தரத்தில்
மேகந் திரிவதுங்கள் மென்குழலுக் கஞ்சியன்றோ
திருநுதற்கொப் பாகுஞ் சிறுமதியென் றுல்வோர்
வரும்பாது சொல்வார்க்கு மந்தோ சிறுமதியே
மெல்லிநல்லீர் நும்புருவ வில்லுக்கு மற்றவில்லைச்
சொல்லு முவமையினைச் சொல்லவெனில் நாணுளதே
கண்டவர்த நெஞ்சைக் கரைத்துருக்கி யின்பரசங்
கொண்டிடச்செய் வாணர் கொழுங்கவியோ நும்விழிகள்
சொல்லம்புக் கஞ்சேன் றுதிச்மரம் புக்கஞ்சேன்
வில்லம்புக் கஞ்சேன் விழியம்புக் கஞ்சலுற்றேன்
உற்றமணி நாசிக் குவமை குமிழென்னில்
மற்ற மலரின் மணமறிய மாட்டாதே

கற்பகப்பூங் கொம்பனையீர் கன்னங்கண் ணாடியெனி
லற்புடனே முத்த மளிக்கச் சுகந்தருமோ
சீர்த்திபெறு முங்கள் திருச்செவியை வள்ளையெனிற்
கீர்த்திமத னாகமங்கள் கேட்குந் தாமுடைத்தோ
சொல்வரிசை கண்டுவமை சொல்லும் புலவருநும்
பல்வரிசை கண்டு பகருந் தரத்தினரோ
செம்பவளந் தன்னையுங்கள் செவ்விதழென் றாலதுதா
னிசம்பவள மாய்ச்சுவைக்க வெய்தாத் துவரலவோ
தவாமதியீ ருங்கள் தகைமுகத்திற் கொப்பா
யுவாமதியைச் சொல்வா ருதவா மதியினரே
கன்னிக் கமுகைக் கழுத்துக் கிணையென்று
லன்னமுதற் புட்குரல்க ளங்கொவிக்க மாட்டாதே
மோக மணித்தோளை மூங்கிலடி யென்றுரைப்போர்
நாகரிக ரல்லரவர் நாவே யஃதாமே
யௌவனத்தீர் முன்கரத்தை யாழென்று லன்பினெனைச்
செவ்வை யுடனணைத்துத் திவ்யசுக நல்கிடுமோ
உச்சிதஞ்சேர் காந்தளும துள்ளங்கை யென்றுரைத்தாற்
கச்சவிழ்த்துப் பொற்கலசக் காமவமு தந்தருமோ
மேகக் குழலீர் விரலைப் பவளமென்றாற்
போகத்தி லின்பவளம் பூரிக்கச் செய்திடுமோ
பாவையீர் கைநகத்தைப் பைங்கிளிமூக் கென்னிலது
தாவிப் பிடிப்பாரைத் தான்கொத்திக் கௌவிடுமே
மட்டவிழுந் தாரீர்நும் மார்பிடமெ லாங்கவர்ந்து
வட்டமிட்டண் ணாந்து வளர்ந்தேயிறுமாது

மத்தகச மத்தகத்தை வாதிட்டு வாலிபர்தஞ்
சித்தமதைச்சூறையிட்டுச்செம்மணிப்பொற்கிண்ணமொத்து
சிந்துரப்பொட் டிட்டதெனத் தேமற் படர்ந்துமலர்ப்
பந்திணையை யெற்றிப் பளபளத்துப் பூரித்துக்
கந்தகுங்கு மங்கதம்ப கஸ்தூரி தண்களபச்
சந்தனமு மென்புனுகுஞ் சவ்வாது மேற்றிமிர்ந்தங்
கிட்டிறுக்குங் கச்சினைவீ றிட்டுப் புறப்பட்டுத்
திட்டமுற்ற நல்லோர் சிறையிருத்தல் போலிருந்து
மின்னலிடை தாங்காது வேளுந் திகைத்துமது
சந்நிதிமுன் னின்றே சலாஞ்சலா மென்றிறைஞ்சக்
கம்பீர முற்றெனது கண்ணுமன முங்கவர்ந்த
சம்பீர வர்ணச் சவுந்தரிய மாதனத்தை
வெற்மென்றால் வேலவனார் மேவ வருவாரே
வெற்பென்று லிந்த்ரன் விரைந்தே தொடர்வானே
கும்பமென்று லந்தக் குறுமுனிவன் றன்னதென்பான்
செம்பொன்முடி யென்றுற் சிலைவேள் சமர்புரிவான்
பொற்றுள மென்றுற் புகலியரென் சொல்வாரோ
மற்றுவு பந்தென்றால் வஞ்சியருஞ் சூழ்வாரே
வீங்குதலில் வட்டென்றால் வெட்வரு வாருலகோர்
மாங்கனியே யென்றால் வனக்கிளிகள் சூழ்திடுமே
தண்ணிளநீ ரென்றாலென் றாகத்தைத்தீர்த்திடுமோ
வண்ண மிகுத்த மதயானைக் கொம்பென்றால்
சீப்பாய் சிமிழாய்ச் சிணுக்கரியாய் மோதிரமாய்க்
காப்பாய் கழங்காய்க் கடைபட்ட தாதலினால்

ளன்னென் றுவமை யெடுத்துரைப்பே னுவலர்முன் [ன்றோ
சொன்னவையைச் சொல்லினந்தச் சொன்னவையேயாகும
சந்தனத்தின் றண்களபச் சந்தனத்தின் றூரையோ
வந்த வுரோம மணியுதர மாவிலையோ
சுக்காற்றுக் காற்று விடைதாறுண் டோவிலையோ
வாக்கான் மனத்தான் மதிக்க நினைக்கரிதே
செம்பவள மோவிரல்கள் திங்களோ மேல்நகங்கள்
அம்புயமோ செம்பஞ் சணிந்த வடிமலர்கள்
யேந்து முகிற்குழலீ ரேழுலகை யும்மயக்கு
மாந்தளிரோ மேனி மடமயிலோ நுஞ்சாயல்
மையழகும் பொட்டழகும் வாழ்த்துவனே வான்மகளிர்
கையழகு மெய்யழகுங் காலழகுக் கொவ்வாதேல்
தன்னழகும் பொன்னழகுந் தாழ்ந்ததினி யென்றுமது
முன்னழகும் பின்னழகு மோகினியு மெச்சவளே
சகிமாரு மின்றித் தனியாய்ப்பூங் காவில்
முகிழ்தனத்தீ வந்ததுமென் மும்மைத் தவப்பயனே
வந்துநின்ற வெண்முன் வசனித்தால் வாய்மூத்தந்
சிந்துமோ மேளனோப தேசமது பெற்றீரோ
பேதைமையோ வூமையோ பேசா மடந்தையரோ
போதனையோ பூணுமணிப் பொற்செவிதான் கேளாதோ
அண்டினோர் தம்மை யருகழைத்திங் காதரிக்கும்
ஒண்டொடிக்கை நல்லீ ருமதுவு மேதென்றால்
கோவூரைக் காட்டினீர் குன்றத்தூர்க் காட்டினீர்
ரோவிலா தும்மிடவுள் ஞாதனைக் காட்டீரோ

மாநிதியா முங்கள் மணிவாய்க் கனியளித்தால்
தேனமுதுண் டின்பந் திளைத்திங் கிருக்கேனே
செங்குமுத வாயாற் றிருமுத்த மொன்றளித்தா
லிங்குமக்குப் பன்முத் தெழிலாரஞ் சூட்டேனே
செம்பவளக் கையாரச் சேர்த்துப் பிடித்தணைத்தாற்
கும்பவள மார்பிலெழிற் கோவைவடஞ் சூட்டேனே
தேவியரை மூவருந்தந் தேகத்தில் வைத்துள்ளா
ராவியீ ரும்மை யகத்துள் ளிருத்தேனே
மின்னனையீர் சங்கீத வித்தைநீர் காணவெனில்
மன்னுஞ் சுகவசந்த மாளிகையி லென்னைவிட்டால்
தம்புருவி ரண்டினையுஞ் சற்றே விலக்கியெழிற்
கம்பீர மாகக் கவினுந் தனக்குடத்திற்
கைத்தா டனதாளங் காதன் மிகமுழக்கி
முத்தார் மணிமிடற்றில் முன்னு மிசைபாட
உன்னதவம் மாளிகைக்கு ளோர்காலிற் பல்காலும்
பன்னருஞ்சங் கீதப் பரதநடங் காட்டேனே
காமர்க் குழலீரென் கல்வி யறிந்திடப்பொற்
றூமரையின் பீடத்திற் சற்றே யிடங்கொடுத்தால்
வேங்கடத்தந் தாதி வியந்துதிருக் கோவைபயின்
றூங்கணிய லங்காரத் தாழ்ந்த பொருளறிந்திங்
குல்லாச மாக வுளமுவந் துற்றபுள்ளி
யில்லாத கல்வி யிரசம் புகட்டேனே
இக்கான மென்மொழியீ ரிக்காம்வில் லீசனுக்கு
முக்காலு மென்னை முழுப்பூசை செய்யவிட்டால்

அநங்காக மப்படியே யைந்தெழுத்தை யோதி
மனங்கொண் *டிதவாய் மலர்கொண் டருச்சித்தே

யூணுறக்க மின்றி யுபவாச மாயிருந்து
பாணியுறப் பாலும் பழமுஞ்செந் தேனுமுண்டு

சீலத் துடனே திருச்சின் னமுமுழக்கிக்
காலந் தவறாக் கனபூசை செய்யேனோ

கான்வேட்ட மாடியவென் கைத்திறத்தைக் காணவெனில்
நான்வேட்ட காம நலவேட்ட மாடவிட்டால்

மோகவலைக் கட்டால் முயலுங் கலையுமலைந்
தேகவிடைச் சிங்க மெதிராய் விரைந்தெழும்பப்

புள்ளினம றைந்தே பொருமிக் குரலிசைப்பக்
கள்ளவிழுங் கூந்தற்பைங் காடு நிலைசோர

மான்கள் மருள மதகயங்க ளைப்பிடித்து
நான்சமர்த்தாய் மேவுசுக நல்வேட்ட மாடேனோ

செங்கமலைக் கொப்பாகுஞ் செவ்வனத்தீர் யௌவனத்தீர்
மங்கலசொ ரூபமலர் வாவியினி லென்னைவிட்டா

லாடை களைந்தங் கதனின் முழுகுங்கால்
வாடையி னிரண்டு வனசமுகை மார்பழுந்தச்

செவ்வனச மொன்று திருமுகத்தி னிற்பதியச்
செவ்வனச மொன்று திகழுமுது கிற்பொருந்த

மற்றோர் வனச மணிப்பிடரின் மீதுலவ
வுற்ற வரால்க ளுவந்திடையி னைப்பிணிக்கச்

சேலிரண்டு தாவிச் செவிவள்ளை மேற்பாயச்
சீலக் குமுதநறுஞ் செந்தேன் கசிந்தூரக்

---

* இதவு - இதம்.

தழற்பாசி சோரக் குளிர்சங் கொலிக்க
முழுது முடல்தோய்ந்து மோகவிடாய் தீரேனோ
எந்நேர மானாலு மோகாந்த மாயிருக்கும்
பொன்னே யுனையுவந்து புல்லாமற் போவேனோ
அந்தவலை கட்டி யலையாம லேயெதிரில்
வந்தமட மானைவிட்டு வந்தவழி மீள்வேனோ
மலையுமிருங் கானும்போய் வாடியுழ லாமல்
வலியவந்து நின்ற மயிலைவிட்டுப் போவேனோ
மிக்கமலர் கண்டுவந்து மேவுஞ்செந் தேனைவண்டு
பக்குவமா யுண்டுருசி பாராமற் போவதுண்டோ
எட்டு விதமணத்துள் யாமே மனமிசைந்திங்
கிட்டமுறக் கூடுவதே பின்ப மணமலவோ
மூன்றாளோர் மானைமுருகவேள் கூடியதும்
மின்னாள் சுபத்திரையை வில்விஜயன் கூடியதும்
பன்னுமச்ச மின்னைப் பராசரன்முன் கூடியதும்
துன்னுஞ் சகுந்தலையைத் துஷ்டியந்தன் கூடியதும்
பேசுமவர் சம்மதமோ பெற்றோர்கள் சம்மதமோ
நேசித் தணைவதுவே நேரிழையீ ருத்தமங்காண்
கன்னற் சிலைவளைத்துக் காட்டுமல ரம்பெய்திங்
கென்னை வருத்து மெதிராளிக் கச்சமுற்றே
வந்து சரண்புகுந்தால் மைப்புருவ வில்வளைத்துத்
தொந்தவிழி யம்பு தொடுத்தெய்தா லென்செய்வேன்
வாமப் பசும்பொன் மணிமருங்கின் மங்கையீர்
காமப் பசிதணித்தல் காருண்ய மாகுமன்றோ

அதிக வயர்வுற் றரும்பசியால் வந்த
அதிதிக் குதவ லறத்திற் குரியதன்றோ

அருங்கைத் தொடிவளையீ ராரென்றீ ரென்னை
மருங்கை நகராளும் மன்னென் றறியீரோ

சிந்தா மணியனையீர் திண்ணிலத்தில் நின்றபதம்
நொந்தா லெனதுமனம் நோவுமென வெண்ணீரோ

வண்மை யபனும் வடிவையமு தாற்படைத்துக்
கண்மணியீர் நும்மனத்தைக் கல்லாற் படைத்தானோ

சிலைக்கோட்டை வென்ற செழுந்தனத்தீ ரென்னை
மலைக்கோட்டை மன்னனென மாண்பி னறியீரோ

எந்தவள நாடென் றெனையுவந்து கேட்பீரே
லைந்துவள நாடன்யா னாகு மெனப்பின்னும்

சாற்றி யருங்காம சன்னதமுண் டாக்கிமிகப்
போற்றி யுருவேற்றப் புன்சிரிப்புக் கொண்டுநின்றாள்

நின்ற குறிப்பால் நிருபன் மருங்கையர்கோன்
மன்றன் மணமகன்போல் மாமலர்க்கை தான்பிடித்தான்

தலைவன் தலைவி நட்பு

கைப்பிடித்த மட்டிற் களிதுளும்பிக் காமரசத்
திப்பியதே னூறத் திருவனையா ளுட்குழைந்தாள்

வித்தைபெறும் க்ருஷ்ண விஜயரா ஜேந்திரனும்
ரத்தினநி கர்த்தவப ரஞ்சி யெனுஞ்சசியும்

சம்பங்கி வல்லி தழைத்துப் படர்ந்ததருக்
கம்பஞ் சுமந்த கடிமலர்ப்பூம் பந்தரின்கண்

வாசங் கமழ வதிந்தபூம் பள்ளிமிசை
நேச ரதிமதன்போல் நெஞ்சுவந்து முத்தமிட்டு

வாசப் பிளவுகொண்டு மாறிச் சுருள்கடித்துப்
பேசி மலர்முடித்துப் பேதமற்றங் கின்பமுறக்
கண்டிருந்த புட்குலங்கள் காதலிற்றம் பேடுகளைக்
கண்டனையுங் காட்சியையுங் கண்டுமிக வானந்தங்
கொண்டுதட நீர்தோய்ந்து கோதிலமு துண்டார்போல்
தண்டலையிற் சோபந் தணிந்திருந்தா ரப்போது
மானடியைப் பற்றிவந்த மால்விஜய பூச்செயபூ
மானடியைப் பற்றி வனத்திருந்த சேனையெலாம்
நாடிச் சுகுந்தலைபால் நண்ணியவோ ரண்ணலைமுன்
தேடியபோல் வந்து செகபதியைத் தேடலுற்றார்
யானைவரும் பின்புமணி யோசைவரு முன்பெனல்போற்
சேனைவரு மோசை திருச்செவியிற் கேட்டவுடன்
சீலன் சுரதசுக லோலன்சிங் காரவடி
வேலன் கிருஷ்ண விஜயகன பூபாலன்
திருவை யிருத்திவருஞ் சீதரன்போல் மின்னார்
திருவை யிருத்தியந்தச் சேனைக் கெதிரானான்
சுந்தரனைக் கண்டு தொழுது பெருஞ் சேனையர்கள்
சந்திரனைக் கண்ட சகோரம்போற் றுமகிழ்ந்தார்

தலைவன் நகரடைதல்

தந்தச் சிவிகை தனிலேறித் தன்னைத்தன்
சிந்தை தடுக்கச் சிவிகையோர் முன்னடக்க
நல்லமைச்சர் சேனையரு நாற்புறமுஞ் சூழ்ந்துவரப்
புல்லுமெமக் கின்புதவும் பொன்மருங்கை யூர்வந்து
மாமேவு கற்பட்டி மாரியம்மை தாள்பணிந்து
கோமேவு செவ்வேற் குமரனையுங் கும்பிட்டு

கருணைச்சொக் கேசர் கயற்கணியைப் போற்றித்
தருந்திருவெண் ணீற்றுப்ர சாதம் பரிந்தேற்று
கந்தமலர்த் திவ்யகடைக் கண்காட்டு முன்விரைந்து
வந்த மகுட மதகரியின் மீதமர்ந்து
மேளதா ளங்களுடன் வீரசின்னந் தாரையெக்
காளந் துடிதவண்டை கர்ச்சித் திடுமுறுமி
நாகசுர மேள நயந்தகுழ லோங்குதவில்
வாகுறுமிர் தங்கமுதல் வாச்சியமெ லாமுழங்கப்
பண்காட்டி நற்பரதப் பாவவகைக் கைகாட்டிக்
கண்காட்டி மின்னார் கனநடன மாடிவர
மேவுந்தன் சுற்றத்தின் விற்பனவி நோதர்பலர்
தேவருங்கண் டுள்வியக்குந் தேவராட் டாடிவர
மண்களிக்க வந்த மருங்கைநகர் மால்விஜயன்
கண்களிக்க வீரரொழிற் கத்திவிளை யாடிவர
பார்த்திபன்றான் மெச்சவுயர் பாணுக்கோல் கொண்டுலகிற்
கீர்த்திபெறு வீரர் கெரடிவிளை யாடிவர
எப்பாரு மஞ்ச விருமருங்கு பெய்காக்குஞ்
சிப்பாயி மார்களெலாந் துப்பாக்கி யேந்திவர
கைப்பிரம்பு கொண்டதட்டிக் கட்டியர்கள் முன்னடக்கத்
தப்பில்லா நாட்டின் சனசமுகஞ் சூழ்ந்துவரக்
கண்ணியவு தாரகுண கர்ணவ தாரபுமா
புண்ணியலா வண்யா புருஷோத் தமதருமா
மாரா வசந்தசுகு மாரா மனோகரவ
சீரா விஜயகன தீரா ஜெயவீரா

வாகா சுகந்தமலர் வாகா வுலகநிரு
வாகா கருணைப்ர வாகாநல் வைபோகா
சீலா சுகிர்தமத லீலாவி நோதவதி
கோலா கலவுசித லோலா வநுகூலா
தண்மையுறு மேகைசிவ சண்முகக்க வீசுரற்கு
வண்மையுறு த்யாகியென வந்தருள்க்ரு பாசமுத்ரா
வடுகர்கொங்கர் குடகர்வங்கர் மகதரங்கர் தமிழர்வந்து
தடமிகுந்த கொலுநிறைந்த சமுகதுங்க ஜயதூரங்கா
வீமா கிருஷ்ண விஜயபூச் சேந்த்ர சுக
நாமா பலராமா ராமா வபிராமா
சோமா சுகசார்வ பூமா துலங்குமுல்லைத்
தாமா பாராக்கு பராக்கெச் சரிக்கையெனப்
பட்டரிசை பாடிவரப் பண்மணிப்பொன் மாமுடிமேல்
வட்ட மதிபோல் வயங்குங் குடைபிடிக்க
மென்கவரி மென்மொழியார் மென்மை யுடனிரட்டப்
பன்மணிப்பொற் பஞ்சவன்னப் பாவாடை வீசிவர
மொட்டுமுல்லைக் கன்னி முகமினுக்கிச் சின்னியெனுங்
கட்டழகு சேடியர்கள் காளாஞ்சி யேந்திவரச்
செய்யமணிப் பொன்னருகு தீவர்த்தி தாங்கிவர
ஐயரிக்கண் மின்னார்க ளாலத்தி யேந்திவர
வீதிதொறும் வீடுதொறும் விம்மிதமாய் மெல்லியர்கள்
சோதிமணி யாலத்தி சுற்றியதை யென்னசொல்வேன்
மஞ்சணிற வாலத்தி வைத்தேந்து மாதர்பலர்
பஞ்சவன்ன வாலாத்தி பார்த்தேந்து மாதர்பலர்

விம்பரத்ந வாலத்தி மேலேந்து மாதர்பலர்
செம்பவள வாலத்தி தேர்ந்தேந்து மாதர்பலர்
மூத்துமணி யாலத்தி முன்னேந்து மாதர்பலர்
சித்ரமணி யாலத்தி சென்றேந்து மாதர்பலர்
செம்பொனணி யாலத்தி செய்தேந்து மாதர்பலர்
கும்பவிளக் காலத்தி கொண்டேந்து மாதர்பலர்
பொற்பூவி னாலத்தி போந்தேந்து மாதர்பலர்
கற்பூர வாலத்தி கண்டேந்து மாதர்பலர்
இவ்விதமா யாலத்தி யேந்தியரு கார்ந்துமின்னார்
செவ்வையுறச் சுற்றித் திருஷ்டி கழித்தனரே
பார்த்திபனெங் கோமான் பவனிவருங் காட்சியினைப்
பார்த்துக் களிக்கப் பரபரப்பாய்த் தாமோடி
கொண்டை குலுங்க வருவார் சிலமடவார்
தண்டை குலுங்க வருவார் சிலமடவார்
ஆரங் குலுங்க வருவார் சிலமடவார்
பாரங்குலுங்க வருவார் சிலமடவார்
ஆடை சரிய வருவார் சிலமடவார்
வாடை கமழ வருவார் சில மடவார்
வந்தமட வாரையெலாம் மன்னனவன் கண்டுவந்து
விந்தைமிகு மால்யானை மீதிருந்து பூமேவித்
தூண்டிக் கறுப்பனையுந் தொல்வரத ராஜனுட
னாண்டருளும் பூசைவீட் டம்மையையும் வந்தித்துச்
சின்னம் மணியென்னச் செப்பமகி ழும்பெரிய
அன்னையெனுங் காமாயி யம்மணியைத் தாள்பணிய

வாழ்கவென்றன் கண்மணியே மாதவமே யின்பமெலாஞ்
சூழ்கவென வம்மணியார் சொல்லிபா சீர்வதிக்க
அம்பொ னரண்மனையி லார்ந்தருந்தி வீற்றிருந்தான்
செம்பொற் றிருவனையாள் சிங்காரப் பூங்காவில்

தலைவி தலைவனைத் தேடிவருந்தல்.

தன்னைப் பிரிந்ததுரைச் சாமிதனைக் காணுமற்
றன்னந் தனியாய்த் தயங்கிப் பரிதபித்தங்
கெண்ணுது மெண்ணி யிதயமெழு காயுருகித்
தண்ணருஞ் சோலையினுஞ் சார்ந்த சுனைகளினும்
சென்றெங்குந் தேடித் திரிந்தே செழுஞ்சேவ
லன்றிலைக்கா ணுத வரும்பெடைபோ லுள்ளுடைந்தாள்
ஒல்லையினெங் கோமா னுருவெளியைக் கண்டுகண்டே
யல்லமனை யன்பா லணைந்தயரு மாயையொத்தாள்
மருவியவின் பத்தை மனதில் நினைந்தங்
கிருங்கடல்முத் தின்மே * லிருகடலின் முத்துகுத்தாள்
நளின முகைமேல் நகப்பிறையைக் கண்டு
தளர்ந்துநெட்டு யிர்த்துத் தளிர்மேனி சோர்ந்தயர்ந்தாள்
மண்டலத்தின் மாரனிகர் மன்னனிடத் திற்புதிதாய்க்
கண்ட சுகந்தன் கருத்தை யுருக்காதோ
என்னசெய்வாள் பேதை யிசைந்துருசி கண்டுவிட்டாள்
தன்மன மயங்கிப் பின் சற்றே தெளிந்தெழுந்து
அகிலினமே நல்ல வசோகமே விண்ணின்
முகிலினமே த்யாக முகிலினைநீர் கண்டீரோ

---

* இருகடல் - கண்களாகிய கடல்.

கண்மானே யென்றுவமை காட்டற் கிலக்கான
பெண்மானே யென்மருங்கைப் பெம்மானைக் கண்டீரோ
அகமே மகிழ வமுதமொழி கொஞ்சுஞ்
சுகமேயென் னாசைச் சுகமதனைக் கண்டீரோ
புலவரையே போன்ற பொருள்பலவுங் கொண்ட
குலவரையே யென்றன் குணவரையைக் கண்டீரோ
பசந்தவென்றன் மேனி பரிசித் துலாவும்
வசந்தமே யென்றன் வசந்தன்வரக் கண்டாயோ
புதுமலரின் வந்து புதியவமு துண்ணும்
மதுகரமே யென்றன் மனோகரனைக் கண்டாயோ
அரும்பேதை யென்னை யறியாயோ நற்செங்
கரும்பேயென் னின்பக் கரும்புவரக் கண்டாயோ
இந்தமலர்க் காவிலெனை யேகாந்த மாய்க்கலந்த
சொந்த மிருக்கவொன்றுஞ் சொல்லாமற் போவானோ
முந்த வகலிகையை மோசத்தாற் சேர்ந்தகன்ற
விந்திரனே வந்தணைந்திங் கேமாற்றிச் சென்றானோ
வள்ளி தனைமுன் வனத்திற் சுகித்தகன்ற
கள்ளமுரு கன்றான் கலந்தே யகன்றனனோ
பைந்துழாய்த் தாமனோ பத்மனோ மன்மதனோ
சந்திரனோ கந்தருவன் றானோ சயந்தனோ
ஆரென் றறியே னவன்மார்பின் மாலையிலே
காருலவு காமர் களிவண்டு மொய்த்ததனால்
கண்க ளிமைத்ததனாற் கண்டகன்றான் தேவனல்லன்
தண்மருவு மிந்தத் தடங்காவிற் றீரமுடன்

பூமி புகழ்மருங்கைப் பூமான் விஜயதுரைச்
சாமி யணைந்ததல்லாற் சந்தேகம் வேறுமுண்டோ
தேடிவந்தென் னையன் றிருவழகை யென்மனக்கண்
ணுடியிற்ப தித்திங் ககலவோ விங்குவந்தான்
இன்பசுகந் தந்த விளம்பேதை நம்மையங்கே
யன்புடனே தேடி யயர்வாளென் றெண்ணிலனோ
காதலன்று னிந்தக் கவடுசெய்வா னென்றறிந்தாற்
காதல் தணியுமுன்னே கைபோட்டு வாங்கேனோ
பற்றுடனே வந்திப் படிசெய்வா னென்றறிந்தாற்
சற்றுத் தலைதொட்டுச் சத்தியஞ்செ யென்னேனோ
அத்தைமக ளானாலு மக்கரைதீர்ந் திட்டபின்பு
புத்திகெட்டா ளென்பதெலாம் பொய்யல்ல மெய்யாச்சே
நீராழங் கண்டாலு நெஞ்சாழங் காண்பதற்கிங்
காரால் முடியுமென்பா ரவ்வுரையு மெய்தானே
எந்தநா டென்றதற்கி யானைந்து நாடென்றான்
எந்தநாட் டைக்கண்டு யான்தேடிச் சென்றிடுவேன்
இங்கிதச்சு கங்கா விசைக்குயில்காள் பூவைகாள்
உங்களுரை பொய்யா துவந்தணைந்தான் மன்னவனே
என்னைமுன்ன மேச விதந்தெரிந்த புட்குலங்காள்
மன்னவன்ற னூர்பேர் வழுத்தத் தெரியாதோ
மன்னவனே யென்றால் வழுத்தாதோ புட்குலங்கள்
அன்னவனே யானாலகலவிட்டுப் போவானோ
ஊரை மறைத்தே யுரைப்பானோ விங்குவந்தோன்
பேரை வினவாமற் பேதை யிசைந்தனனே

வழுவிலான் மீண்டும் வருவானோ வென்று
கொழுகொம் பகன்ற கொடிபோற் றளர்ந்தயர்ந்தாள்

பாங்கியர் தலைவியைத் தேற்றி மனையடைதல்.

வெற்பிரண்டு தாங்கியொரு விண்மின் னெழுந்ததுபோற்
பொற்பின் மலர்பறித்த பூவைதனைக் காணுமல்
மானே மயிலே மடக்கொடியே மாங்குயிலே
தேனே யெனக்கூவிச் சேடியர்கள் தேடிவந்து
கண்டார் மருண்டார் கலைநெகிழ்ந்து மெய்சோர்ந்து
வண்டாரும் வல்லி வதக்கமுற்ற வாறேது
இளைப்போ பசியோ வியல்நித் திரையோ
களைப்போ மதப்பயலின் கண்ணேறு பட்டதுவோ
அண்ணன்மார் கன்னிமா ரையனு ரச்சுறவோ
கண்ணின்முன் யாதேனுங் காற்றுவரக் கண்டனையோ
என்றுரைத்துக் கையா லெடுத்தணைத்து மாந்தளிராற்
றென்றலுற வீசத் தெளிந்துமயில் போலெழுந்தாள்
கன்னிமுகங் கண்டவர்கள் கைநெரித்துப் பற்பலவா
றுன்னி நடுங்கி யுவப்புறுமெங் கண்மணியே
செவ்விதழிற் கன்னத்திற் சேந்தவடு வேதெனப்பூந்
திவ்யமலர்க் கொம்புபட்டுச் சேந்த வடுவீதென்றாள்
என்னுமந்தக் கள்ளிதனை யேந்திக்கை லாகுதந்து
மின்னு மணிமனைக்கு மெல்லக் கொடுபோனார்
மாந்தளிரின் மேனி மலரணையிற் சார்ந்திடலும்
வேந்தனை யெண்ணி வெகுவாகப் பேசலுற்றாள்

சீதோப சாரமெலாஞ் செய்தாலும் வைதவரை
ஏதோவின் றென்மீ திரக்கமின்றித் தோழியரே
செந்தழலின் சாற்றைச் சிதறப் பிழிந்தெடுத்துச்
சந்தனமென் றேனோ தடவினீர் தோழியரே [துத்
குன்றுறையும் வெம்புலியைக் கொண்டுவந்தென் முன்விடுத்
தென்றலென்றீ ரேனித் திருகுசெய வெத்தனித்தீர்
வெந்நீரைக் காய்ச்சி விளாவாம லென்மீது
பன்னீரென் றேனோ பதறிமிக வீசுகின்றீர்
சாலஞ் செயுமவர்போற் றந்தீரென் றுண்டைக்கப்
பாலுங் கசக்குதடி பழலென்று சொன்னீரே
மறிபிடித்த கண்ணீர் மருள்பிடித்ததென்றோ
வெறிபிடித்து நின்றீர் விடுவீ ரெனவெறுத்தாள்
வெண்முத்த மாலைதன வெப்பால் வெதுப்புறத்தன்
கண்முத்தத் தண்ணீர் கசியத் தணிந்ததுவே
என்றனுயிர்ப் பாங்கியரே யிந்தமலர் மெல்லணையுங்
கன்றுங் களபக் கருஞ்சாந்துஞ் சந்தனமும்
சொந்த மனைவியர்பாற் றுய்க்கின்ற காதலனார்
வந்தணையக் காணார் மனம்போற் கொதிக்குதென்றாள்

நற்றாயிரங்கல்.

வல்லி விரகத்தை மாதரா ரன்னைக்குச்
சொல்ல வவளுந் துடிதுடித்தங் கோடிவந்து
நேர்முகமாய்க் கண்டு நினைவழிந்திட் டென்மகளின்
றார்முகத்தி லேவிழித்தா ளந்தோநா னென் செய்வே

ளென்றுதிரு மேனியெலா மேறிட்டுப் பார்த்துவெகு
நன்றுநன் றிந்த நடத்தைவெகு நன்றடியே
என்றே முகக்குறியு மின்ப விதழ்க்குறியு
நின்ற குறியு நெகிழ்ந்ததில தக்குறியும்
கண்டாள் வெகுண்டாள் கலந்தவனு ரென்றுசினங்
கொண்டாள் சகிமாரைக் கோபித் தியம்பலுற்றாள்
பாங்கியரே நீங்களெலாம் பக்கத் துணையிருந்தும்
ஆங்குவந்தே யிவ்வா றலக்கழித்தான் யாரொன்றாள்
யாரோ வறியோ மனைவரும்பூங் காவடைந்து
சேராத்தனித்தனியாச் சென்று சென்று பூவெடுத்தோம்
எங்கெங்குஞ் சென்றுபின்ன ரொல்லா மொருமுகமாய்
நங்கைதனைச் சந்தித்து நாங்கள் மனந்திகைத்தோம்
அங்கடியைப் பார்த்தோ மரசரடி போலதிலே
சங்க விரேகை தனிப்பதும ரேகைகளும்
பதிந்திருக்கப் பார்த்ததன்றிப் பார்த்ததிலை மற்ற
விதமொன்று மம்மா வியன்மருங்கை நங்கோமான்
வேட்டை யொலியுமிகு மேள முழக்கொலியுந்
தோட்டமெங் கும்மதிரச் சூழ்ந்த வெனவுரைத்தார்
சகிமா ருரைக்கச் சகலகலா வல்லி
வெகுநன்று மந்த விஜயமக ராஜன்றான்
வசியமுடன் மோகினியின் மந்திரமுங் கற்றோன்
வசியமுறச் செய்தே மயக்கி மணந்திருப்பான்
காமக் கலைதேர்ந்த காமனவன் றானெனது
சோமரதி யைக்கடைடாற் சும்மா விடுவானோ

ஐயனழகை யரம்பையரு நத்துவரேல்
துய்ய வெனதுமகள் தொட்டேனும் பாராளோ
வாகார்ந்த வென்மகளை வாய்ந்தநவ கேணிவனம்
ஏகாதே யென்றுரைத்தே னென்சொல்லைக் கேட்டாளா
மன்னவனைச் சேர்ந்து மதிப்புடையா ளானதினால்
கன்னி யிவளையினிக் கண்டிக்க லாகாதே
சோதி மணிமகுடன் தூய்ச்சமுகங் கண்டேநாம்
வாதிக்க வென்றால் மருமகனு மாகினனே
முன்பின் றெரிந்து முகப்பழக்க மில்லாத
வென்பைந் தொடியையவ னெப்படித்தான் வந்தணைந்தான்
வந்த வுடனேயம் மன்னவன்கண் முன்பாக
விந்தச் சகிமா ரெதிர்ப்பட்டாற் சேருவனோ
சின்னஞ் சிறியாள் தெரியா ளுலகநடை
மன்ன னவன்மேல் மனங்கொண்ட தாச்சரியம்
விந்தைக் கிருஷ்ண விஜயனெனும் பேர்க்கிணங்க
இந்தத் துடுக்குசெய்தா னிங்கவன்மேற் குற்றமில்லை
முந்த வரசுசெய்த முந்துவீ ரேந்த்ரரெனும்
தந்தையிருந் தாலுமவர் சந்நிதிமுன் போயுரைப்பேன்
சாலிமுத லாம்பயிர்க்குத் தற்காப்பாம் வேலியந்த
வேலி பயிரதனை மேய்ந்திட்டா லென்செயலாம்
மன்னவன்பாற் கூறலாம் மற்றோர் பிழைபுரிந்தால்
அன்னவனை செய்திட்டா லார்பால் முறையிடலாம்
மாதிவள் தன் ஜாதகத்தில் மன்னவனைச் சேர்வளெனச்
சோதிடர்க ளாய்ந்துமுனஞ் சொன்னமொழி மெய்யாச்சே

நற்படியே செப்பும் நமதுகுல தேவதையும்
சொற்படியே வந்துமுன்னாள் சொன்னமொழி மெய்யாச்சே
கள்ளி யிவளுடைய கைரேகை நோக்கியொரு
குள்ளக் குறத்திகுறி கூறியது மெய்யாச்சே
காலை கிழக்கிற் கவுளிசொன்ன சொற்போல
மாலை புனையநல்ல மன்னவனும் வந்தானே
என்றுபல வாறு யிரங்கியினித் தோழியரை
யின்றுநாம் பேசிமிக வேசுவதா லென்னபயன்
நம்போன்ற நங்கையரு நாட்டாருஞ் சம்மதிக்கக்
கம்பீர மாமணமே கன்னி புரிந்துவந்தாள்
மின்னிவளுக் கந்த விஜயனே நாயகனும்
அன்னவனுக் கேற்ற வருங்கிளியே நாயகியாம்
இலகுமிவள் முற்பிறப்பி லெத்தவஞ்செய் தாளோ
மலர்பறிக்கப் போயினாள் மாணிக்கங் கண்டெடுத்தாள்
மனமகிழு மென்கண் வயிறுசெய்த பேறோ
கனிபறிக்கப் போயினாள் கற்பகத்தைக் கண்டணைந்தாள்
என்றருகிற் சென்றன்பா யென்கண்ணே யென்பொன்னே
நன்றுசெய்தா யஞ்சாதே ரத்தினமே யென்றுரைத்து
முத்தமிட் டுச்சி முகந்துவந்து மெய்தடவி
நித்தமும ருங்கை நிருபனொடு நீகூடி
மலருமண மும்போல் மருவிமகப் பெற்றுத்
திலதநுத லிற்சிறப்பச் செந்திருப்போல் வாழ்ந்திரென்றாள்
அத்தருணஞ் சேடியர்க ளங்கமுறச் சூழ்ந்துவர
முத்துமணிப் பொற்சிவிகை முன்றிலுறக் கண்டவுடன்

கொம்பனையா ரெல்லாங் குதுகலித்துக் கொண்டாடிக்
கும்பிடப்போந் தெய்வங் குறுக்காக வந்ததுபோல்
மன்னவனை யெண்ணி வசனிக்கு மப்பொழுதே
பொன்னின் சிவிகை புறவாசல் வந்ததென்றார்
இன்பவப ரஞ்சியரே யெங்க ளரசியரே
முன்போற் றயவிருக்க முன்னுமென்று ளோர்தோழி
பொன்னே மகராஜ பூசிதமே நானேழை
என்னை மறவாதே யென்று ளொருசேடி
இனிப்பார்ந்த நட்பீ ரினிமே லெனைத்தான்
நினைப்பீரோ தேவியரே நீரென்று ளோர்துணைவி
நீங்கா நிழல்போல நேரிழையீர் நான்கூடப்
பாங்காய் வரவோ பகருமென்று ளோர்பாங்கி
இந்த விதஞ்சகிமா ரெல்லா முரைத்துநிற்கச்
சுந்தரியா ளன்பீர் சுகமாய் வருகவென்றாள்
சகலகலா வல்லி தவமணியே மன்னன்
புகலுஞ்சொற் போல்நடந்து புத்தியாய் வாழ்ந்திரென்றே
ரஞ்சிதமி குத்தவப ரஞ்சியெனும் பெண்ணரசை
விஞ்ச வலங்கரித்து விற்சிவிகை மீதேற்றி
ஆர்ந்தவுயிர்ப் பர்ங்கியரை யக்கணமே தான்கூட்டித்
தேர்ந்தங் கனுப்பியா சீர்வதித்துத் தாய்மகிழ்ந்தாள்
பல்லக்கிற் சென்றமகா பாக்யவப ரஞ்சிமின்னாள்
மல்லல் வளமருங்கை மாநகரில் மன்னவன்றன்
செம்பொ னரண்மனையிற் செந்திருப்போல் வந்தமர்ந்தே
அம்பொனக நாணி யதிபனைக்கும் பிட்டுநின்றாள்

பெண்மணியை நோக்கிப் பிரியமுட னெங்கோமான்
கண்மணியே யென்றுமலர்க் கைப்பிடித்துத் தானழைத்தே

உண்டு சுகித்துள் ளுறவுற் றதுமுதலாய்
மண்டலம திக்க மகிழ்வாக வாழுகின்றாள்

காக்குமருங் கைவாழி கார்வரத மால்வாழி
யாக்கமிகு பூசைவீட் டம்மை யருள்வாழி

மாமேவு கற்பட்டி மாரி யனைவாழி
கோமேவு கூர்வேற் குமரன் பதம்வாழி

தூண்டிக் கறுப்பத் துரைவாழி சொக்கேச
ராண்ட கயற்க ணனைவாழி சேய்வாழி

நம்மையெலா மாதரிக்கு நற்றாயாங் காமாயி
யம்மணியா ரானபெரி யன்னையார் தாம்வாழி

வெண்ணெயுண்ட க்ருஷ்ண விஜயபூமான்வாழி
யண்ணலவன் செங்கோ லரசும் நனிவாழி

ஆட்சி யழகுவெள்ளை யம்மணியார் தாம்வாழி
மாட்சி யபரஞ்சி வல்லியுமென் றும்வாழி

எங்கோன் கரிபரியு மெந்நாளி னும்வாழி
மங்கா விருதினமும் வண்மை யுடன்வாழி

சுஞ்ச குலம்வாழி சூழுமுற வோர்வாழி
வஞ்சமிலா வாஸ்தான மந்திரிமார் தாம்வாழி

காரியஸ்தர் வாழிமற்றுங் காவலருந் தாம்வாழி
சீரியரும் வாழியிந்தச் செந்தமிழும் வாழியவே.

மருங்காபுரி,
பூச்செயன்காதல்.
முற்றிற்று.

ஆகக் கண்ணிகள் 564.

வேலுமயிலுந் துணை.

சீட்டுக்கவி.

வேதமுத லானசம ராபுரிக் குமரவடி வேலனடி யேத்துமி
தயன், விஜயகலை வாணிகரு ணாகடா க்ஷன்ப்ரபல வித்வ
ஜனர் மெச்சுமு சிதன், விமலவரு ளானந்த சற்குருவ
ரம்பெறுவி சேடணன் மதிவி தரணன், மேன்மையின
லங்கார காவியபு ராணமிசை மேவுமெண் ணரியவண்
ணம், மேதகுவி நோதமிகு காதல்மடல் கோவைபல
விதமான தூதுபரணி, விந்தையின நந்தவகை நாடகங்
கீர்த்தனை விளங்குசிங் காரப் பதம், விற்பனர்வி யப்
புறக் கற்பனைரசக்யமாய் விரைவினிற் பாடு நிபுணன்,
விபவநிறை யேகை சிவ சண்முகக் கவிராஜ விக்ரமன்
விடுதி ருமுகம்

மாதர்மல ரோதிமண மூறுசுனை தோயுமெழில் வான் மக
ளிர் மணம களிராய், வானகமு லாவகல மாமணமி
தேதெனவ வானவர்க லாரு டலெலாம், மாவளிகள்
பூமுகரல் போன்முகர மானினியர் மாநகையி னேச
விமையோர், வாடிமிக வூடிடுவி நோதமது காணவுயர்
மால்வரைம ருங்கை நகரான், வயமுற்ற ரங்கநிருத்
டிணமுத்து வீரபூச் செயமகிபன் வரசு புத்ரன், மணி
நிலவு கருமலைக் கரிவரத முகிலினருண் மழையினுற்
றனது நாட்டின், மன்னுயிர்ப் பயிர்வளர்த் திடுமுள
ணடுத்தவர் மனத்துய ரகற்று மினியன், மங்களசு
பாகரன் சுஞ்சகுல சேகரன் வதனசந் திரவ சிகரன்

சீதா சமானகா ருண்யபுண் ணியகண்ய திண்யலா வண்ய
தேகன், சிங்கார னத்திலகி மங்காத கீர்த்தியொடு செ
ங்கோல்செ லுத்து மதிபன், தெங்கணார்க லிங்கர்திட
கொங்கர்பல சிங்களர்தெ லுங்கருய ரங்கர் வங்கர்
செயதுங்க சதுரங்க தளசிங்க மேனநின்று திறைதந்து
பணிக்ழலினன், செழுமுல்லை மலராரன் மணிமகுட கம்
பீர சிங்கார னிதிகு பேரன், செந்தமிழ்தெ லுங்கிங்கி
லீஷ்முதற் பலகலை தெரிந்தநிர் வாகயோகன், செக்கச்
சிவப்புநிற வட்டத்த னத்தியர்கள் சித்தங்களிக்குமா
ரன், திருவெலா மினிர்க்ருஷ்ண விஜயபூச் செயராஜ
திலகன்ம கிழ்ந்து காண்க.

தரதவிழ்பசுங்கற்ப தாருநீ சலியாத சங்கநிதி பதுமநிதிநீ, த
ருகாம தேனுசிந் தாமணியு நீசொன்ன தானமழை பொ
ழிகொண்டல்நீ, தமிழருமை யுணர்முருக நீயென்றுன்
மீதிற் றகுங்காதல் பாடியெமது, தனயைதிரு மணமி
னிதி னிறைவேற்ற வேண்டிய தனம்வேண்டி நினது
சமுகந், தனையடைந் தேமாத லாலதனை யேற்றிரு
சகஸதிரம் பொன்தந்து நற், றங்கமெடல் புங்கமிகு
சிங்கமுக தோடா தகுந்தருத் ராக்ஷ கண்டி, சரிகை
யொளிர் சால்வைதண் டிகைவிருதெ லாந்தந்து சமுக
வித் வானெனப்போ, தந்துதொல் புவியரசர் கவியர
சர் மெச்சவுந் தானகண்டு மனமகிழ்வையே.

Ma. Ma., Co. L